செ.வெ.எண் : 07 / செப்டம்பர் நாள் : 05.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## 90 சதவீத மானியத்துடன் சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் விருப்பமுள்ள விவசாயிகள் விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மின்சார தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தற்போதைய சூழ்நிலையில் விவசாய கிணறுகளுக்கு மின் இணைப்பு கிடைப்பது மிகவும் காலதாமதமாகின்றது. இந்நிலையில், சுற்றுப்புறசூழல் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு விவசாயிகளின் நீர்பாசன தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மரபு சாரா எரிசக்தியில், அதாவது, சூரிய ஒளியில் இயங்கக்கூடிய பம்ப்செட்டினை அரசு மானியத்துடன் அமைத்து தரும் திட்டம் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், மின்சாரத்தை எதிர்நோக்கி இல்லாமலும், பிற எரிபொருள் டீசல் மற்றும் மண்ணெண்ணெய் செலவின்றியும், இயற்கையாக கிடைக்கும் சூரிய சக்தியினை பயன்படுத்தி விவசாயி பம்புசெட்டை இயக்கி நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

தற்போது விவசாயிகளிடையே சூரியசக்தி மூலம் இயங்கும் பம்புசெட்களுக்கான தேவை அதிகமாக இருப்பதால், தமிழக அரசு நடப்பாண்டில் இவ்வகை மோட்டார் பம்புசெட்களை 1000 விவசாயிகளுக்கு 90 சதவீத மானியத்தில் வழங்க உள்ளதாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் : 110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 11.07.2017 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் இலவச மின் இணைப்பு பெற விண்ணப்பித்து, பதிவு மூப்பு பட்டியலில் இருந்து தங்களது விண்ணப்பித்து நீக்கிக்கொள்ள விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் ஏற்கனவே இலவச மின் இணைப்பு பெற்றுள்ளவர்கள், சூரியசக்தி பம்புசெட் கிடைத்தால் தங்களுக்கு இலவச மின்சாரம் வேண்டாம் என்று எழுத்துபூர்வமாக சம்மதம் தரும் விவசாயிகளுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் 90 சதவீத அரசு மானியத்துடன் சூரியசக்தி பம்புசெட்கள் அமைத்து தரப்படும். நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் மூதுரிமையின் அடிப்படையில் சோலார் பம்புசெட் அமைத்து தரப்படும்.

இந்நிபந்தனையின்படி சோலார் பம்புசெட் அமைக்க விரும்பும் விவசாயிகள் கீழ்க்காணும் வேளாண் பொறியியல் துறை அலுவலகங்களை அணுகி விண்ணப்பிக்கலாம்.

| | | |
|---|---|---|
| 1. செயற் பொறியாளர்(வே.பொ.),<br>வேளாண்மை பொறியியல் துறை,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,<br>இராமநாதபுரம்.<br>போன் : 04567-232493 | 2. உதவி செயற் பொறியாளர் (வே.பொ.),<br>கருவூலக கட்டிடம் 2ம் தளம்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், இராமநாதபுரம்.<br>போன் : 04567-230543 | 2. உதவி செயற் பொறியாளர் (வே.பொ.),<br>5/249ஏ, கொல்லம் பட்டறைத் தெரு,<br>பரமக்குடி.<br>போன் : 04564- 224044 |

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**